# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## அசல் வழக்கு எண். 54-2022

**நாள்: 07.07.2025**

**பெயர் : அருள்மொழி**

**PW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த அசல் வழக்கில் வாதி பிரதிவாதிக்கு செலுத்திய ரூ.6 லட்சம் சம்பந்தமாக உடன்படிக்கை எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று சொன்னால் பதிவு செய்யபடவில்லை. அந்த தொகையானது பெரிய தொகை என்பதால் பதிவு செய்யபட வேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு தெரியாமல் தான் சிவசக்தி நிதி நிறுவனத்தில் பணத்தை செலுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. 14,56,000 ரூபாய்க்கு பிரதிவாதி எனக்கு மேற்படி சொத்தினை விற்பனை செய்ய ஒப்புகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி நிதி நிறுவனத்தில் ரூ.8,10,000 பிரதிவாதியின் அனுமதியில்லாமலும் தகவல் தெரிவிக்காமலும் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த அசல் வழக்கில் முதன்மை பரிகாரமாக கிரய ஆவணம் பதிவு செய்ய உத்தரவிடவேண்டும் என்றும் மாற்று பரிகாரமாக கிரய தொகையை வட்டியுடன் கேட்டுள்ளேன். பிரதிவாதி மாற்று பரிகாரமான கிரய தொகையை செலுத்த தயாராக உள்ளார் என்றும், அதற்கு நான் கேட்ட வட்டிதொகை அதிகமாக உள்ளது என்று சொன்னால் நானும் வங்கியில் கடன் வாங்கி தான் தொகை கொடுத்துள்ளேன். வங்கியில் கடன் வாங்கியது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்குரையில் தாக்கல் செய்யவில்லை. வட்டி விகிதம் அதிகமாக பெற வேண்டும் என்று வழக்குரையில் உள்ள சொல்லாத சங்கதிகளை முதல் முறையாக நீதிமன்றத்திற்கு வந்து சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.